**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.30/2025** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 3** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | ராமகிருஷ்ணன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **10.02.2026**

**எதிரி காணொளியில் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை:**

நான் கை களத்தூரில் குடியிருக்கிறேன். சிறுவாச்சூர் பாரில் சப்ளையராக வேலைசெய்கிறேன். காணொளியில் ஆஜரில் உள்ள எதிரியை நான் பார்த்துள்ளேன். அ.சா.1, 2 ஐ தெரியும். பிரச்சனை நடந்தஅன்று நான் ஊருக்கு போய்விட்டேன். மறுநாள் வந்தேன். போலிசார் வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் என்ன எழுதப்பட்டுளளது என்று எனக்கு தெரியாது. படிப்பறிவு கம்மி. பார்வை மகசரில் உள்ள என்னுடைய கையெழுத்து அ.சா.ஆ.2, போலிசார் விசாரித்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கை களத்தூர் என் சொந்தஊராகும். அங்கிருந்து தான் நான் வேலைக்கு வருகிறேன். வாரத்திற்கு ஒருமுறை ஊருக்கு செல்கிறேன். 11.02.2024ம் தேதி நான் சிறுவாச்சூர் பாரில் தங்கியிருந்தேன் என்றால் சரியல்ல. 12.02.2024ம் தேதி

காலையில் அ.சா.1 எழுந்துவெளியே வந்தபோது எதிரிகள் இரண்டுபேரும் அவரிடம் தகராறு செய்தார்கள் என்றும் சரக்கடிப்பதற்காக 10 பாட்டில்கள் கேட்டார்கள் என்றும்,அவ்வாறு இல்லைஎன்றால் பணம் கொடு என்று கேட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. கொடிக்கமல் என்று எனதுபேரை கேட்டால் பெரம்பலூரில் பயந்து ஓடுவார்கள் நீ என்ன எதிர்த்து பயம் இல்லாமல் பேசுகிறாய் என்று எதிரி சொன்னதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அப்போது எதிரி கொடிக்கமல் இடுப்பில் வைத்திருந்த கத்தியை வைத்து அ.சா.1ன் வயிற்றில் குத்துபோல் வைத்து உடன்இருந்தவரிடம் இளையராஜா அவன் பாக்கெட்டில் உள்ள பணத்தை எடுடா என்று சொன்னார் என்றும், அப்போது அவர் கையை பிடித்து முறுக்கி கொண்டே அவர் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.5000/-த்தை பறித்து கொண்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அப்போது திருடன் திருடன் என்று சத்தம்போட்டதாகவும், பாரில் இருந்த நானும் மற்றவர்கள் வந்தோம் என்றும், அப்போது எதிரிகள் கத்தியை சுற்றிகொண்டே உங்களை எல்லாம் குத்தி கொன்றுவிடுவோம் என்று, மிரட்டியதால் நாங்கள் யாரும் கிட்டே செல்லவில்லை என்று போலிசார் விசாரணையில் நான் சொன்னேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவர்கள் ஓடிவிட்டார்கள் என்றும், அதன்பிறகு அ.சா.1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. பயத்தின் காரணமாக பொய்யாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. போலிசார் சம்பவஇடத்தை பார்வையிட்டு தயாரித்த பார்வைமகசரில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது தெரியாது என்று மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இல்லை.

<u>மறுவிசாரணை</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.